1973 பிப்ரவரி 7]

(இ) இந்நிதிகளுக்கு எந்தெந்த வாயில்களிலிருந்து வருவாய் கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) விவர அறிக்கை @ மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, இந்த நிதிகள் துறைமுகங்கள் வளர்ச்சிக்குப் பயன்படுகின்றனவா அல்லது பொது நிதிக்குச் சேர்க்கப்படுகிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த நிதி துறைமுகங்கள் வளர்ச்சிக்குத் தான் பயன்படுகிறது. அந்தந்தத் துறைமுகத்தின் பணமானது அந்தந்தத் துறைமுகத்தில் வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. பொது நிதியில் சேர்க்கலாமென்று ஆலோசனை இருந்து கொண்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் குளச்சல் துறைமுகத்திற்கு 1,31,650 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் எவ்வளவு தூரம் செலவாகியிருக்கிறது, எஞ்சிய தொகை எவ்வளவு இருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இப்போது துறைமுகங்கள் கையில் இருக்கப்பட்ட தொகைதான் இங்கே காட்டப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி துறைமுகப் பணம் காட்டப்படவில்லை. அதைப்பற்றிக் கேள்வி எழவில்லை. தூத்துக்குடி பணம் 1,56,49,000 ரூபாய் இருக்கிறது.

Loan for Sprinkler Irrigation

* 58 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether instructions have been issued by the Government to the Land Development Banks to issue loans for Sprinkler Irrigation Units; and

(b) if so, the details thereof?

@ 312–313 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

தெளிப்பு முறைப் பாசனத்திற்கு கடன்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தெளிப்புப் பாசன அமைப்புகளுக்கு கடன்கள் வழங்கு மாறு நிலவள வங்கிகளுக்கு அரசு கட்டளை பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த தேவைப்படுகிற இடங்களில் தெளிப்புப் பாசன முறை, அதாவது ஸ்ப்ரிங்கில் இர்ரி கேஷன் முறைக்கு கடன் வழங்கப்படுகிறது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, இந்தப் பாசன முறை மாநிலத்திலே கடைப்பிடிக்கப்படுகிறதா ? எங்கு பரவலாகக் கடைப்பிடிக்கப்படுகிறதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது முக்கியமாக திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டத்தில் ஏறத்தாழ 7,360 ஏக்கருக்குப் பயன்பட்டு வருகிறது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இது போன்ற முறை சட்ட மன்ற உறுப்பினர் விடுதியிலே ஏற்படுத்தி எடுக்கப்பட்டிருக் கிறது. இதன் காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இதற்கும் இந்தக் கூட்டுறவு நில வள வங்கிக்கும் ஒட்டுறவு இல்லை.

Co-operative Central Bank, Thanavur

* 59 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact that a Memorandum was submitted to the District Collector, Thanavur during the last week of August, 1972 by an All Party Committee regarding malpractices in the Co--operative Central Bank, Thanjavur;

(b) if so, the nature of the complaint; and

(c) the action taken by the Government in the matter?